In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti

Deposition of Witness

| | |
|---|---|
| CC: | 99/2014 |
| PW: | 8 |
| காவல் நிலையம்: | கோவில்பட்டி மேற்கு |
| தேதி: | 07-11-2025 நாள்: வெள்ளி கிழமை |
| பெயர்: | பொன்மாரிமுத்து |
| த/பெ: | ஆறுமுகம் |
| கிராமம்: | மணியக்காரன் பட்டி |
| தாலூகா: | விளாத்திகுளம் |
| வேலை: | லாரி உரிமையாளர் |
| வயது: | 46 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07.11.2025**

(Accused A2 present. A1,A3,A4 absent. Petition U/s.317 CrPC/355 BNSS filed and allowed)

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் மணியக்காரன் பட்டியில் வசித்து வருகிறேன். நான் லாரி உரிமையாளராக இருந்து வருகிறேன். கடந்த 18.05.2014 ம் தேதி இரவு 09.00 மணியளவில் சகாதேவன் என்ற என் நண்பர் டிப்பர் லாரி ஒன்றை கோவில்பட்டியில் உள்ள பார்க் ரோட்டில் உள்ள வேன் ஸ்டாண்டில் நிறுத்தி விட்டு சென்றுவிட்டார். 19.05.2014 ம் தேதி காலை 07.00 மணியளவில் என் நண்பர் சகாதேவன் வந்து லாரியை பார்த்த போது லாரியை காணவில்லை.

2) பின்னர் எனக்கு சகாதேவன் போன் செய்து என்னுடைய லாரியை காணவில்லை என்று கூறியவுடன் சம்பவ இடத்திற்கு சென்று நான்கு ஐந்து

இடங்களுக்கு தேடி சென்று பார்த்தோம், ஆனால் எங்களால் லாரியை கண்டுபிடிக்க முடியவில்லை. பின்னர் கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றோம், என்னுடைய நண்பர் சகாதேவன் புகார் கொடுத்தார்.

3) பின்னர் சம்பவ இடத்திற்கு நானும் ரெங்காராஜனும் நின்று பேசிகொண்டிருக்கும் போது 20.05.2014 ம் தேதி மேற்படி காவல்நிலைய ஆய்வாளர் அங்கே வந்து சம்பவ இடத்தை பார்த்து லாரியை காணவில்லை என்று கூறியவுடன் வரைபடம் வரைந்து அதில் என்னிடமும் ரெங்கராஜனிடமும் கையெழுத்து பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>1,2 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் 9 ம் வகுப்பு படித்துள்ளேன். காணமால் போன டிப்பர் லாரியானது என்னுடைய நண்பர் சகாதேவனுக்கு சொந்தமானதா அல்லது அவரது மாமனார் ஜெயராமுக்கு சொந்தமானதா என்றால் மேற்படி வாகனம் ஜெயராம் பெயரில் உள்ளது அதனை சகாதேவன் பராமரித்துவந்தார்.

2) சம்பவ இடத்தை வந்து போலிசார் பார்வையிடும்போது சுமார் காலை 09.00 மணி இருக்கும். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3) சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும் போலிசார் வெள்ளை பேப்பரில் என்னிடம் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றாலும், சகாதேவன் என்னுடைய நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>3,4 ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) சகாதேவன் எனது உறவினர் என்றால் இல்லை அவர் எனது நண்பர். சகாதேவன் லாரி காணாமல் போனது சம்பந்தமாக காவல்நிலையத்திற்கு நானும் உடன் சென்றேன் என்றால் சரிதான். மேற்படி கையெழுத்தை நான் என்னுடைய நண்பருடன் சென்றதால் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது** )

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.